செ.வெ.எண்:28 நாள்:17.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பயிர் அறுவடை சோதனையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.02.2017) நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றியம், தவுத்தாய்குளம் கிராமத்தில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் 2016-17ஆம் ஆண்டிற்கு பயிர் மகசூலை கணக்கீடு செய்யும் பணியினை வேளாண்மைத்துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (17.02.2017) ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் **செய்தியாளர்களிடம்** தெரிவித்ததாவது :-

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டு திட்டம் நடப்பு 2016-17ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டில் செயல்படுத்தபட்டு வருகிறது. இந்த திட்டத்தில் ஒரு கிராமத்தில் 20 ஹெக்டேருக்கு மேல் சாகுபடி செய்யப்படும் நெல், மக்காச்சோளம், உளுந்து, நிலக்கடலை, பருத்தி மற்றும் கரும்பு பயிர்களுக்கு பயிர் காப்பீட்டுச் செய்யப்படும். சாகுபடி செய்யப்படும் கிராமங்கள் குறித்து காரீப் மற்றும் ராபி பருவ வாரியாக ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கை செய்யப்படும்.

அறிவிக்கை செய்யப்பட்ட கிராமங்கள் / பயிர்களுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகை செலுத்தி இத்திட்டத்தில் பங்கு பெற வேண்டும். விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகையானது பயிர் அறுவடை சோதனை முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்படும். பயிர் பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் காப்பீட்டுத் தொகை, கடந்த 5 ஆண்டு சராசரி மகசூலுடன் நடப்பாண்டில் பெறப்படும் மகசூலை ஒப்பிட்டு இழப்பீட்டு விகிதாச்சாரத்தை கணக்கிட்டு காப்பீட்டுத் தொகை நிர்ணயிக்கப்படும்.

பயிர் மகசூலை கணக்கீடு செய்வதற்காக, எதேச்சை (Random) முறையில் தற்போது பயிர் அறுவடை சோதனைகள் உதவி வேளாண்மை அலுவலர்கள், கிராமநிர்வாக அலுவலர்கள், புள்ளியியல் துறை அலுவலர்கள் மற்றும் இந்திய வேளாண் பயிர்காப்பீட்டுக் கழக பிரதிநிதிகள் முன்னிலையில் செய்யப்பட்டு வருகிறது. திருமானூர் வட்டாரத்தில், வாரணவாசி கிராமத்தில் திரு.வேலு என்கின்ற விவசாயியின் வயலில் நெற்பயிரில் பயிர் அறுவடை சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், உலர் எடையை உறுதி செய்ய வேண்டி 2 கிலோ அறுவடை செய்யப்பட்ட நெல் தானியங்களும் சோதனைக்காக எடுத்து செல்லப்பட்டது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இவ்வாய்வின்போது, வேளாண்மை இணை இயக்குநர் திரு.சதானந்தம், வேளாண்மை துணை இயக்குநர் திரு.மனோகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திரு.இளங்கோவன், வட்டாரா புள்ளியியல் ஆய்வாளர், பயிர் திட்ட காப்பீட்டு நிறுவன உதவி மேலாளர் திரு.செந்தில்குமார் மற்றும் திரு.செம்மல் மற்றும் கள அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**